

கடலூர் மேற்கு மாவட்டத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுக் கூட்டம் நெய்வேலி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் –அமைச்சர் சி.வெ. கணேசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாநில இளைஞரணி துணை செயலாளர் மண்டலம் 2 பொறுப்பாளர் அப்துல்மாலிக், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ். கணேஷ்குமார் என். துரைராஜ், ராஜேஷ், நாராயணசாமி, சதம், பாரதிராஜா மற்றும் ஒன்றிய கழக, நகரகழக, பேரூர்கழக செயலாளர்கள், புதிதாக நியமனம் செய்யப்பட்ட இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளனர். மாவட்ட அமைப்பாளர் எம். எஸ்.கணேஷ்குமார் வரவேற்றார்.

### அப்துல்மாலிக் - சபா. இராசேந்திரன் தலைமையில்!

# கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அறிமுகக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரை!

கடலூர், பிப்.15-

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, நகர,பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி ஏற்பாட்டில் 09.02.2025 அன்று நெய்வேலி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ்.கணேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார்.

மாநில இளைஞரணி துணை செயலாளர்மண்டலம்2 பொறுப்பாளர் அப்துல்மாலிக், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்துகொண்டு சிறப்புரையுடன் புதிதாக நியமனம் செய்யப்பட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆற்றவேண்டிய கழகப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றியக்கழக செயலாளர்கள், நகரகழக செயலாளர்கள், பேரூர்கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் என். துரைராஜ், ராஜேஷ், நாராயணசாமி, சதாம்,பாரதி ராஜா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

மேலும், இந்நிகழ்வில் சமூக வலை தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலை தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினார்கள்.

### எம்.எம்.சாமி தலைமை! விழுப்புரம் வி.சண்முகம் முன்னிலை!

# சலவை தொ.மு.ச. பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் !

### அடையார் நா.அசோகன், மதுரை சி.நாகராஜ் வரவேற்புரை!

சென்னை, பிப்.15-

தமிழ்நாடு சலவைத் தொ.மு.சங்கம் சார்பாக (தொ.மு.ச.) பேரவையுடன் இணைக்கப்பட்டது. சலவை தொ.மு.ச. பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் 27.01.2025 திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் இராயபுரம் 'ரீபேலஸ் திருமண மாளிகை, சென்னை 13ல் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநிலத் தலைவர் நெல்லை எம்.எம். சாமி தலைமையிலும் பொதுச்செயலாளர் சலவை தொ.மு.ச.விழுப்புரம் வி.சண்முகம் முன்னிலையிலும் அடையார் நா.அசோகன், மதுரை சி.நாகராஜ், ஆகியோர் வரவேற்றனர்.

இதில் சௌந்தரபாண்டி, முருகன், கே.முருகேசன், சேகர், பி.பாஸ்கர், எஸ். கோபால்கிருஷ்ணன், எஸ். செந்தில், எஸ்.ராஜேஷ், திலிப், எஸ்.சுரேஷ், முனுசாமி, க.விநாயகம், அ.தமிழ்செல்வன், அ.சாந்தி, முருகதாஸ், ப.விஜயராகவன், கே.குணாளன், எஸ்.சேகர், எஸ்.சுப்பிரமணி, ஆர்.ரவி, சுப்புராஜ், கார்த்திக், பி.டில்லிபாபு, வி.வீரன், என்.கே. மணிகண்டன், எம்.வேலன், கே.ராணி, ஆர்.முருகன், ஆர்.சரவணன், இ.சி.அன்பழகன், கே.முரளி, எம்.ராஜ்குமார், சி.கே.முனுசாமி, பி. கே.மோகன், எஸ்.சௌந்தரராசன், என்.நாகேஷ், சி.கே. ஆனந்தன், மு.சிவகுமார், ஆர்.செந்தில், எம்.சீனிவாசன், வெங்கட்ராஜ், ஜி.மோகன், எஸ்.பாபு, எஸ்.பி.சந்தனராஜ், கே. இந்திரஜித், ஏ.சின்னதுரை, பி.கார்த்தி, எஸ். அமிர்தவள்ளி, பி.கதிர்வேல், ஆர்.லட்சுமணன், ஏ.மணி மாறன், எஸ். சுப்பிரமணி, எம்.பிரேமா, எம்.ரமேஷ், டி.கருணாகரன், எம்.ஜீவரத்தினம், சி.உஷாராணி, பி.பழனி, ம.செல்வம், கே.ராமச்சந்திரன், வெ.ஆவுடையப்பன், ஜி.போஸ், வி.மாரியப்பன், ஆர்.முருகன், ஜி.ஹரிகிருஷ்ணன், வி. அமுதா, ஏ.லட்சுமி, பாக்கியம், எஸ்.ஈஸ்வரன், எஸ்.சுரேஷ்குமார், மற்றும் பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

தமிழ்நாட்டில் உள்ள சலவைத் தொழிலாளர் என்ற பெயரினை நீக்கி அரசானை வெளியிட்டமைக்கு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும் தமிழ்நாடு மக்களின் நலனினும் முழுமுயற்சியுடன் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் தமிழ்நாடு துணை முதல்வர் தயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி பாராட்டுகின்றோம்.

ஒன்றிய அரசு கடந்த (12.05.1976)ம் ஆண்டு கொண்டு வந்த சட்ட திருத்தலில் (Aamendent) வண்ணார் ஜாதியும் இடம் பெற்றுள்ளது. அதில் வண்ணார் ஜாதி பிரிவானது தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் மற்றும் செங்கோட்டை தாலுகாவில் மட்டும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் அட்டவனை தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தி பட்டியல் அட்டவனையில் இணைக்க வேண்டுமென இக்கூட்டம் வலுயுறுத்திகின்றது.

மீனவர்கள் மற்றும் மண்பாண்டம் தொழில் செய்பவர்களுக்கு மழைகாலங்களில் நிவரண தொகை வழங்குவது போல் துணி துவைக்கும் தொழிலாளர்களும் நிவராணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## அரக்கோணம் என்.அரி கிருஷ்ணன் இல்ல மண விழா!

### அமைச்சர் ஆர்.காந்தி - ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்து!



அரக்கோணம், பிப்.15-

அரக்கோணம் ராஜாபாதர் தெரு மாவட்ட திமுக பிரதிநிதி பூக்கடை என்.அரி கிருஷ்ணன்-ரேகா தம்பதியினரின் மகன்ஹெச். பூபேஷ் திருவள்ளூர்முரளி - வாசுகி ஆகியோரின் மகள் நந்தினிக்கும் வருகிற ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7.30 மணிக்கு திருமணம் நடக்கிறது. திருமணத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, கழக கொள்கைப் பரப்பு செயலாளர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்எல்ஏ, மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர். விநோத்காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.சந்திரன், ஆகியோர் நேரில் சென்று மணமக்களைவாழ்த்துகிறார்கள்.மற்றும்

மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், அ.அசோகன், மாவட்ட துணை செயலாளர்கள் துரை மஸ்தான்,

எம்.சிவானந்தம் நகர செயலாளர் வி.எல்.ஜோதி, ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.தமிழ்செல்வன், பெ.வடிவேலு, ஆ.சவுந்தர், கே.பசுபதி, எஸ்.ஜி.சி.பெருமாள், மாவட்ட மகளிர் அணி அமைப்பினர் ஜெயந்தி, அரக்கோணம் நகர மன்ற தலைவர் லட்சுமிபாரி, ஊராட்சி ஒன்றியகுழு தலைவர் நிர்மலா, சயனபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பாவானி, நகர அவைத் தலைவர் துரை சீனிவாசன், நகர துணை செயலாளர் அன்புலாரன்ஸ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி பேசுகிறார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குறிச்சி இரா. நாகராசன்
### பிப்ரவரி 15 (2005)



கோவை மாவட்டம், குறிச்சி பேரூர் கழகமாக இருந்தபோது, சுந்தராபுரம் கிளைப் பொருளாளராக பணியாற்றத் தொடங்கி, பேரூர் ஒன்றிய அவைத் தலைவர், குறிச்சி பேரூர் செயலாளராகவும், பின்னர் குறிச்சி நகரமான பிறகு, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

குறிச்சி நகராட்சித் தலைவராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்றி அப்பகுதி மக்களின் மனதில் இடம் பிடித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## ‘தி இந்து’ ஆங்கில நாளிதழின் (13.02.2025) தலையங்கம்

# தமிழ்நாட்டு மக்கள் எண்ணங்களின் பிரதிபலிப்பே!

தமிழ்நாட்டினுடைய ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் தமிழ்நாட்டு மக்களால் அறுதிப் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று கடந்த மூன்றரை ஆண்டு காலமாகத் தேர்தல் களத்தில் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை “திராவிட மாடல்” ஆட்சியின் மூலம் 80 சதவிகிதத்திற்கு மேலாக நிறைவேற்றி, இந்திய ஒன்றிய எல்லைக்குள்ளடங்கிய மாநிலங்களை விட பல்வேறு துறைகளில் சிறப்பான வெற்றியினைப் பெற்று முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை சமூக பொருளாதார அரசியல் வல்லுநர்கள் உறுதி செய்துள்ள நிலையில், இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்தில் அடுத்த பொதுத் தேர்தலை இன்றைய ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் திராவிட முன்னேற்ற கழகமும், அதன் கூட்டணிக் கட்சிகளும் எதிர்கொள்ளவிருக்கின்றன.

எதிர்கொள்ளவிருக்கின்ற சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் 200 சட்டமன்றத் தொகுதிகளை கைப்பற்றுவோமென “திராவிட மாடல்” ஆட்சியின் முதல்வர், அதற்கான ஆக்கப் பணிகளில் இரவு பகல் பாராது தமிழ்நாடு முழுவதும் சுற்றி சுழன்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவரைப் பின்பற்றி துணை முதல்வர் அவர்களும், ஏனைய அமைச்சர்களும் இந்த அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டப்பயனும், சட்டப் பாதுகாப்பும் சமுதாயத்தின் எந்தப்பகுதி மக்களுக்காக உருவாக்கப்பட்டதோ, அந்தப் பகுதி மக்களுக்கு சிதைவின்றி சென்றடைந்து விட்டதா என்பதை அறிந்து கொள்வதற்காகவும், அது குறித்து மக்களின் பிரதிபலிப்புகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் முதலமைச்சர் அவர்களைத் தொடர்ந்து களஆய்வில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை ஊடகங்கள் ஒவ்வொரு நாளும் தெரிவிக்கின்றன.



பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டினுடைய ஆளுநராக நியமிக்கப்பட்ட ஆளுநர் ரவி, நியமிக்கப்பட்ட நாள் தொடங்கி, இன்றுவரையிலும் மாநில அரசோடு முரண்பட்டுச் செயல்படுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார் என்பதை விரிவாக விளக்கத் தேவையில்லை. ஆளுநரின் நடவடிக்கைகள் அனைத்தும் அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாகவும், மாநில அரசின் இயல்பான நடவடிக்கைகளுக்குத் தடையாகவும் இருப்பதோடு, இந்திய அரசியல் சட்டத்தில் ஆளுநருக்கான சட்டவரையறைகளையும் மீறிச் செயல்பட்டு, பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்கள் முறையாக செயல்பட முடியாத இக்கட்டான சூழ்நிலையை ஆளுநர் உருவாகியதால், தமிழ்நாடு அரசின் சார்பாக உச்சநீதி மன்றத்தை அணுக வேண்டிய அவசர - அவசிய சூழ்நிலை உருவானது. உச்சநீதிமன்றம் சென்ற பின்னரும் ஆளுநர் ரவி தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.

இந்தக் காலகட்டத்தில்தான், வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் 13.02.2025ஆம் தேதிய ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் “வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் முரண்படுவது” (Wilful violation) என்ற தலைப்பில் இந்தப் பிரச்சனைக் குறித்து விளக்கி தலையங்கம் தீட்டியுள்ளது. அதில் உச்ச நீதிமன்றம் இந்த வழக்கில் ஆளுநரின் நடவடிக்கைகள் குறித்த கேள்விகள் மூலம் தமிழ் நாட்டின் ஆளுநர் தன்னுடைய நோக்கங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றுகின்ற வகையில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது என தலையங்கத்தின் தொடக்கமே வெளிப்படுத்துகிறது.(The Supreme Court of India's probing questions to the Tamil Nadu Governor, R.N. Ravi, have exposed a pattern of wilful violation of constitutional duty on his part.)

உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்றைக்கு வெளியிடப்பட்டாலும், அந்தத் தீர்ப்பின்படி தொடர்புடைய இருசாரரும் தீர்ப்பின்படி நடக்க வேண்டிய அவசியமும், கட்டாயமும் உள்ளது என்பதை மறப்பதற்கில்லை.

இதற்கிடையில் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழின் தலையங்கத்தின் கடைசி பகுதி மிக முக்கியமான எச்சரிக்கையாகும். சட்டமன்றத் தேர்தல் வருவதற்கு இன்னும் ஒன்றரை ஆண்டு காலம்தான் இருக்கிறது. ஓராண்டு கழிந்தவுடனே தேர்தலுக்கானப் பணிகள் படிப்படியாகத் தொடங்க ஆரம்பித்து விடும். இந்த ஒன்றரை ஆண்டு கால இடைவெளிக்குள் தமிழ்நாடு அரசால் முன்னெடுக்கப்படும் மக்கள் நலத்திட்டங்களும், மக்கள் பாதுகாப்பிற்கான சட்டங்களும் ஆளுநரின் திட்டமிட்ட மனப் போக்கின் காரணமாக காலதாமதப்படுத்துவதற்கான வாய்ப்புகள் நிரம்பவுண்டு.

சட்டமன்றதால் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஆளுநருடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கின்ற பொழுது ஆளுநருக்கு சட்டப்படி இரண்டு வாய்ப்புகள் உண்டு. ஒன்று அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க காலதாமதப்படுத்தலாம் அல்லது குடியரசு தலைவருக்கு அனுப்பி வைக்கலாம். தமிழ்நாட்டு ஆளுநர் ரவியை பொருத்தமட்டில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்கவும் மாட்டார், மாறாக சட்டம் அவருக்கு வழங்கியிருக்கின்ற வாய்ப்பை பயன்படுத்தி அந்த கோப்பில் கையெழுத்திடுவதை காலதாமதப்படுத்துவார். பின்னர், குடியரசு தலைவருக்கும் அனுப்பி வைப்பார். ஆளுநருக்கு வழங்கப்பட்ட இந்த இரண்டு வாய்ப்புகளும் சட்டத்தைச் செம்மைப் படுத்துவதற்காக வழங்கப்பட்ட வாய்ப்புகள்தான்.

ஆனால், தமிழ்நாட்டினுடைய ஆளுநர் ஆர். என். ரவி இந்த நல்ல நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட இந்த வாய்ப்பை தமிழ்நாடு அரசின் நோக்கங்களை முறியடிப்பதற்கு பயன்படுத்துகிறார் என்பதை அவரது கடந்த கால நடைமுறைகள் மூலம் தீர்க்கமாக அனுமானிக்கலாம். அரசியல் சட்டப்படி அமைந்துள்ள மாநில ஆட்சியை இயங்கவிடாமல் செய்வதற்கும், திட்டங்களையும், சட்டங்களையும் சீர்குலைப்பதற்கும் ஆளுநர் ரவி முயற்சிப்பார் என்ற ஆழமான ஐயப்பாட்டை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆளுநர் ரவியை தமிழ்நாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்ற பொருள்பட கருத்து தெரிவித்துள்ளது. (Even in a 2023 hearing, the Court had questioned whether a Governor, having chosen to withhold assent, could exercise another option by referring the same Bill to the President. Mr. Ravi appears bent on scuttling any law that does not suit his world view. It is time the Union government took note of the challenge his continuance in office poses to constitutional governance in Tamil Nadu.)

இந்திய அரசியல் சட்ட நிர்ணயசபைக் கூட்டத்தில் ஆளுநரின் பணிகள் எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்து உரையாற்றிய தமிழ்நாட்டைச் சார்ந்த சட்ட வல்லுநர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் “ஆளுநர்கள், தங்களின் ஆற்றல், திறமையினைப் பயன்படுத்தி மாநில அரசுகளுக்கு நல்ல ஆலோசனைகள் வழங்குபவர்களாகவும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காரணியாக இருந்து அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்”.

(The central fact to be remembered is that the Governor is to be a constitutional head, a sagacious counselor and adviser to the Ministry, one who can throw oil over trobled waters Referance: Constitution Assembly Debates volume VIII, Page No 431, 432)

ஆனால், தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். ரவி பிரச்சனைகளை எப்படி உருவாக்கலாம், அதற்கேற்றபடி எப்படிச் சட்டப்பிரிவுகளை தன் நோக்கத்திற்கேற்றபடி சுற்றி வளைத்துப் பயன்படுத்தலாம் என்றே சிந்திக்கிறார். எனவே, மேலும் தமிழ்நாட்டில் அமைதியான அரசியல் சூழ்நிலை தொடர வேண்டுமானால் பாரம்பரியமிக்க இந்து ஆங்கில நாளிதழின் ஆலோசனையை, மதித்து ஆளுநர் ஆர்.என். ரவியை தமிழ்நாட்டிலிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையை ஒன்றிய அரசும், குடியரசுத்தலைவரும் மேற்கொள்ள வேண்டுமென்பதே தமிழ்நாட்டு மக்களின் விருப்பமும், வேண்டுகோளுமாகும் என்ற மக்களின் பிரதிபலிப்புத் தான் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழின் தலையங்கமாகும்.